1970 மார்ச் 6]

டிலும் தரத்தில் உயர்ந்த புதிய நெல் வகைகளை உருவாக்கும் பணி ஆடுதுறையிலுள்ள வட்டார ஆராய்ச்சி நிலையத்தில் மேற்கொண்டும் நடைபெற்று வருகின்றது.

திரு. கே. விநயகம்: ஏ.டி.டி. 27 என்கின்ற நெல்லைவிட பின்னாலே புதியதாக ஒரு ரகம் கண்டுபிடித்து, அதற்கு ஏதோ ஒரு புதிய பெயர், நமது அமைச்சர்களுக்குள்ளே ஒரு அமைச்சரின் பெயரை அதற்கு வைத்திருப்பதாக நான் பத்திரிகையிலே பார்த்தேன். அப்படியென்றால் என்ன பெயர்? அந்த விதையினால் நமக்கு அதிகமாக விளைச்சல் கிடைக்குமா?

What are the important features of that variety?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: புதியதாக கண்டு பிடிக்கப்பட்ட அந்த நெல்வகை ஆடுதுறை வட்டார ஆராய்ச்சி நிலையத்தில் கண்டுபிடித்தது அல்ல. கோவையில் கண்டு பிடித்ததாகும். ஐ.ஆர். 5, ஐ.ஆர். 8 இவைகளைவிட அதிகமாக விளைச்சல் தரக்கூடியது. ஒரு ஏக்கருக்கு 4,000 கே.ஜி. விளைச்சல் தரக்கூடியது. இன்னும் நல்ல சன்ன அரிசியும் கூட. அது மிகவும் நல்ல அரிசி என்று கூறப்படுகிறது. அதற்கு நம்முடைய முதல்வரின் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

திரு. ப. மகாதேவன்: தலைவர் அவர்களே, அதே போன்று உணவு அமைச்சர் கூறியது போல, ஜெயா, பத்மா, அல்லது ஜெயா, லலிதா என்ற ஒரு வகை ரகம் வந்திருக்கிறதா? அது நடப்பில் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இருக்கிறது. ஜெயா, பத்மா.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. விளக்கம் கோரல்

மராட்டிய மாநிலத்தில் வாழும் தமிழர் நிலைபற்றி தமிழக முதலமைச்சர் தெரிவித்த கருத்து பற்றி மராட்டிய முதலமைச்சர் மராட்டிய சட்டமன்றத்தில் அளித்த அறிக்கை பற்றி வந்துள்ள செய்தி குறித்து.

திரு. க. இராமமூர்த்தி: ஆன் எ பாயிண்டு ஆப் கிளாரிபிகேஷன், ஸார். தலைவர் அவர்களே, நேற்று முன்தினம் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மார்டின் அவர்கள் மகாராஷ்டிர தமிழர் நிலை பற்றி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்த பொழுது, அதற்கு பதில் அளிக்கையில் நமது முதல் அமைச்சர் அவர்கள் மராட்டிய மாநிலத்திலுள்ள தமிழர்கள் நிலை பற்றி மராட்டிய மாநில முதல் அமைச்சர் அவர்களுக்கு எழுத இருப்ப

தாகக் கூறினார்கள். இதுபற்றி நேற்று மாராட்டிய மாநில சட்ட மன்றத்தில் பேசியுள்ள அந்த மாநில முதல் அமைச்சர் அவர்கள் நமது முதல் அமைச்சர் தமக்குக் கடிதம் எழுதுவது தவறு என்றும், நமது மாநிலம் மாராட்டிய மாநில சட்டம் ஒழுங்குப் பிரச்சினையைப்பற்றி பார்வையிட அங்கே ஒரு குழுவை அனுப்புவது முறையற்றது என்றும் கூறியிருக்கிறார்கள். தவறான அடிப் படையில் தகவல்கள் வந்ததன்பேரில், அவர்கள் அவ்வாறு கூறி யிருப்பதாகக் கருதுகிறேன். நமது மாநில முதல் அமைச்சர் மாராட்டிய மாநில முதல் அமைச்சர் அவர்களுக்குக் கடிதம் எழுதினால், அது முறையற்றதா என்பதைப்பற்றிய தனது கருத்தை நமது முதலமைச்சர் அவர்கள் இங்கு அவைக்குத் தெரிவிக்க வேண்டுகிறேன். இதுபோன்று அங்கே இருக்கிற தமிழர்களுடைய நிலையைப்பற்றி ஏற்கனவே பல சந்தர்ப்பங்களில் நம்முடைய அரசு மாராட்டிய அரசுடன் கலந்து பேசி இருக்கிறது என்ற நிலையையும், அதுபற்றிய முதல் அமைச்சர் அவர்களுடைய விளக்கத்தையும் இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நேற்று முன்தினம் திரு. மார்டின் அவர்கள் இங்கே எழுப்பிய பிரச்னைக்கு நான் பதில் சொல்கிற நேரத்தில், மாராட்டியத்தில் சிவசேனையின் தாக்குதலினால் தமிழர்கள் கொடுமைப்படுத்தப்படுவதாக, திரு. மார்டின் அவர்கள் பேசிய நேரத்தில், அப்படிப்பட்ட நிலை அங்கே இருக்குமானால், மாராட்டிய முதல்வருக்கு அதுபற்றி நான் எழுதுகிறேன் என்று குறிப்பிட்டேன். அதைப்பற்றி என்னுடைய பேச்சைப் படித்துப் பார்த்தேன். குறிப்பேட்டிலும் அப்படித் தான் இருக்கிறது. நான் மாராட்டிய முதல் அமைச்சர் அவர்களுக்கு கடிதம் எழுதுவேன் என்று குறிப்பிட்டிருந்தேன். நான் அப்படி கடிதம் எழுதுவேன் என்று கூறியதை, பத்திரிகையில் வந்த செய்தியின்படி பார்த்தால், மாராட்டிய முதல் அமைச்சர் அவர்கள், அப்படி எழுதுவது தவறு என்று கூறியதாகவும், அதிகார பூர்வமான குழு எதையும் அனுப்பக்கூடாது. அதுவும் தவறு என்று கூறியதாகவும் பத்திரிகையில் பார்த்தேன். நான் இப்பொழுது எந்த அதிகாரபூர்வமான குழுவையும் இங்கிருந்து அனுப்புவதாக இல்லை. நான் நேற்றைய தினம் அவ்வாறு கூறவே இல்லை. ஒரு வேளை பம்பாயில் வெளியான பத்திரிகைகளில் அதைப்பற்றி தவறான செய்திகள் வெளியிடப்பட்டிருக்கக்கூடும். அதை வைத்துக்கொண்டு, அங்கே கேள்வி கேட்கப்பட்ட நேரத்தில், மாராட்டிய முதல் அமைச்சர் அவர்கள் அப்படி பதில் அளித்திருக்கலாம். முன்பு சிவசேனையின் கிளர்ப்பாட்டம் அங்கே நடைபெற்ற நேரத்தில், கழக எம்.பி. ஒருவரும், கம்யூனிஸ்டு கட்சி எம்.பி. ஒருவரும் நிலைமையை அறிய அங்கு சென்றிருந்தார்கள். நிலைமையையும் அறிந்து வந்தார்கள். பழைய செய்தியைக் குறிப்பிட்டேன். புதியதாக இப்பொழுது அதிகாரபூர்வமாக குழு ஒன்றை அனுப்புவதாகக் கூறவில்லை. நான் கடிதம் எழுதுவதாகச்

சொன்னது உண்மை. அப்படி எழுதுவதாகச் சொல்வதில் தவறு இல்லை, எழுதுவதும் தவறு இல்லை. முன்பு ஒரு முறை பம்பாய் முதல்வர் அவர்களுக்கு இங்கிருந்து கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. அங்கிருந்து பதில் நமக்கு வந்திருக்கிறது. அண்மையில் கூட மைசூர் முதல்வருக்கு அங்கே, தாளவாடிப் பிரச்சினை வந்து, ஏற்பட்ட குழுறலினால் தமிழர்கள் தாக்கப்படுகிறார்கள் என்று நான் மைசூர் முதல்வருக்கு கடிதம் எழுதினேன். அவரும் உடனே பதில் அனுப்பினார்.

அதை போல, ஹோசூர் பற்றி ஆந்திர முதல் அமைச்சருக்கு எழுதியிருக்கிறோம். அதேபோலத்தான், நீலகிரிப் பகுதியில் உள்ள நிலை பற்றி கேரள அமைச்சரிடமிருந்து கடிதம் வந்தது. அதற்கும் பதில் அனுப்பப்பட்டிருக்கிறது. ஒரு மாநிலத்தில் உள்ள சிறுபான்மை மக்கள் பாதிக்கப்படாமல் இருக்க, பாதிக்கப் படுவதாகத் தெரிந்தால், அதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுவது சரியானதே. இன்னொரு மாநில முதல் அமைச்சருக்கு எழுதுவது, பதில் போடுவது இவை தவறானவை அல்ல. பத்திரிகையில் வந்திருக்கிற செய்தியை வைத்துக் கொண்டு மராட்டிய மாநில முதல் அமைச்சர் என்ன சொன்னார்கள் என்று நாம் விமரிசிப்பது நல்லதல்ல என்று நான் கருதுகிறேன். நான் அவர்களுக்கு எழுதுவதாகச் சொன்ன கடிதம் எழுதப்படக்கூடிய நிலையில் இருக்கிறது. 'ட்ராப்ட்' தயாராகி விட்டது. பத்திரிகைச் செய்தியிலிருந்து பார்க்கும்போது, அவர்கள் தவறாகப் புரிந்துகொண்டு என் பேச்சுக்குப் பதில் கொடுத்திருப்பது போல இருப்பதால், சபையிலே அன்று என்ன நடைபெற்றது என்பதையும் விளக்கமாக எழுத இருக்கிறேன்.

'லா அண்டு ஆர்டர் ப்ராப்ளத்தில்' ஒரு மாநிலத்திற்கு இன்னொரு மாநிலம் எழுதுவது சரியில்லை என்று மராட்டிய முதல் அமைச்சர் கூறியிருப்பதாக செய்தியிருக்கிறது. சட்டம், ஒழுங்கு, அமைதிபற்றி கருத்துக்களைச் சொல்ல முற்பட்டால், அது தவறாக இருக்கலாம். ஆனால், அங்கே இருக்கும் தமிழர்கள் நலன்கள் பாதுகாக்கப்படவேண்டும் என்கிற கோரிக்கையை அடிப்படையாக வைத்துத்தான் கடிதம் எழுதப்படும். இதன் மூலமாக நண்பர் கேட்ட கேள்வியின் மூலமாக நிலைமைகள் மராட்டிய முதலமைச்சருக்கு இந்த அவையின் மூலமாகவும், கடிதம் மூலமாகவும் அறிவிக்கப்படும்.

(3) ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்.

ஏமாவதி திட்டம் நிறைவேற்றப்படும் என மைசூர் மாநில முதலமைச்சர் விடுத்த அறிக்கையும் அதன் விளைவுகளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வை. சுவாமிநாதன், திரு. ஆர். கருப்பையா, திரு. ஆர். இராமமூர்த்தி, டாக்டர் எச். வி. ஹாண்டே ஆகியவர்கள், "மைசூர் முதல்வர் அவர்கள் மைசூர் அரசு